பக்கங்கள்: நான்கு

Registered sa a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

சுடர்: 5 பிரமோதூத ஸ்ரீ ஆவணி மீ 20 உ புதன்கிழமை (05-09-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 15 கதிர்: 186

# அகதிகள் படகு மீது தாக்குதல்

# எட்டுப்பேர் பலி! 16 பேர் காயம்!!

## பருத்தித்துறை அருகே சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 5

**பருத்தித்துறையிலிருந்து இராமேஸ்வரம் நோக்கிச் சென்று கொண்டிருந்த அகதிகள் படகு மீது, நேற்று முன்தினம் (திங்கள்) இரவு பருத்தித்துறைக் கடற்பகுதியில் வைத்து கடற்படையினர் நடத்திய பீரங்கித் தாக்குதலில் எட்டு அகதிகள் உயிரிழந்தனர். 16 பேர் காயமுற்றனர்.**

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த எட்டு ஆண்கள் மற்றும் பெண்கள், குழந்தைகள் உட்பட 43 பேரை ஏற்றிக்கொண்டு நேற்று முன்தினம் (திங்கள்) இரவு 7 மணிக்கு பருத்தித்துறை முனைக் கடலில் இருந்து புறப்பட்ட படகு ஒன்றே படையினரின் தாக்குதலுக்கு இலக்கானது.

படகு புறப்பட்டு சுமார் 45 நிமிட நேரத்தின் பின்னர் அதனை வழிமறித்த கடற்படைப்படகு ஒன்று அகதிகள் படகை நோக்கி பீரங்கித் தாக்குதலை நடத்தியதாகத் தெரியவந்தது.

படகிலிருந்த பெண்கள், குழந்தைகள் கூச்சலிட்டும் சூள் விளக்கைக் காட்டியும் வெள்ளைக்கொடி அசைத்தும் தங்களைத் தாக்கவேண்டாம் எனக் கதறினர். ஆனால் படையினர் தொடர்ந்து தாக்குதல் நடத்தினர்.

பின்னர் அகதிகள் படகை

(2 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் நேற்று பொருள்களின் விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், செப். 5

யாழ்ப்பாணத்தில் நேற்று பொருள்களின் விலைகளில் பெரும் வீழ்ச்சி காணப்பட்டது.

வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் அமுல் செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்று நீக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த வீழ்ச்சி ஏற்பட்டதாக அறிய முடிந்தது.

பதுக்கி வைக்கப்பட்டிருந்த சீனி, பால்மா வகைகள் மற்றும் மண்ணெண்ணெய் போன்றவை நேற்றுச் சந்தைக்கு வந்தன.

பொருள்களின் விலைகளில் மேலும் வீழ்ச்சி ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக வர்த்தக வட்டாரங்களில் இருந்து அறிய வருகிறது.

இதேவேளை உள்ளூர் உற்பத்திகளான வாழைப்பழம், வெங்காயம் போன்றவற்றின் விலைகளில் ஏற்றம் காணப்பட்டது. (ஒ-143-69)

## ஊர்காவற்றுறைப் பகுதியில் 130 பேரைக் காணவில்லை!

யாழ்ப்பாணம், செப். 5

ஊர்காவற்றுறை பகுதியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது 130 பேர் காணாமற் போயிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

காணாமல் போனவர்களின் பெற்றோர்கள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் இது பற்றித் தெரிவித்திருக்கிறார்கள்,

இவர்களைக் கண்டு பிடிக்க உதவுமாறு அவர்கள் செஞ்சிலுவைச் சங்கத்திடம் கேட்டுள்ளனர். (உ-3-6)

## முல்லைத்தீவில் இருந்து 35,000 பேர் இடம்பெயர்வு

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 35 ஆயிரம் மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர்.

முல்லைத்தீவு அரச அதிபர் திரு. கே. பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த இந்த மக்கள் மாங்குளம், ஒலுமடு, தண்ணீரூற்று, வவுனிக்குளம், முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, அம்பலவன் பொக்கணை போன்ற பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

அவர்களுக்கு உணவுப் பொருள்களை நிவாரணமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார். (ஒ-3-6)

## இலங்கைத் தேயிலை கப்பல் வளைகுடாக் கடலில் மறிப்பு!

லண்டன், செப். 5

இலங்கையில் இருந்து தேயிலையை ஈராக்குக்கு ஏற்றிச் சென்ற கப்பல் ஒன்று, வளைகுடாக் கடலில் அமெரிக்க போர்க் கப்பலினால் வழிமறிக்கப்பட்டது.

வழிமறிக்கப்பட்ட அந்தக் கப்பல் ஓமான் துறைமுகத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டதாக சவூதி அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஈராக் அரசுக்கு எதிராக ஐ. நா. பொருளாதாரத் தடையை விதித்த பிறகு அங்கு பொருள்களுடன் சென்ற முதலாவது கப்பல் இதுவாகும். (ஒ)

## உடனடி நிவாரணத்துக்கு உணவுப் பொருள் கையிருப்பு

யாழ்ப்பாணம், செப். 5

யாழ் - மாவட்டத்தில் பாதிப்பு ஏற்படும் போது உடனடி நிவாரணம் வழங்குவதற்கென யாழ் - செஞ்சிலுவைச் சங்கம் 200 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களை களஞ்சியப்படுத்தியுள்ளது.

பாதிக்கப்படுவோருக்கு நிவாரணம் வழங்குவதற்கு மேலதிக முன்கையிருப்பு [ Buffer Stock] வைக்கும் திட்டம் ஒன்றை யாழ் - செஞ்சிலுவைச் சங்கம் தயாரித்துள்ளது.

அதன் ஆரம்ப ந[illegible]

[2 ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியாவில் நேற்று தாக்குதல்; 10 இராணுவத்தினர் உயிரிழப்பு!

நேற்றுக்காலை வவுனியா, பாவற்குளம் முகாமிலிருந்து வெளியேறி முதலாம் யுனிற் கிராமத்திற்குள் முன்னேற முயற்சித்த முப்பதுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் பத்துப் படையினர் உயிரிழந்தனர்.

தாக்குதல் நடத்தப்பட்டதை அடுத்து உயிர்தப்பிய இராணுவத்தினர் தங்கள் சகாக்கள் பத்துப்பேரின் சடலங்களையும் அந்த இடத்திலேயே விட்டுவிட்டுப் பின்வாங்கிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலின்போது தமது தரப்பில் சஜீப் (பம்பைமடு) வீரமரணம் அடைந்ததாகவும்—

படையினரின் பல ஆயுதங்கள் மற்றும் உயிரிழந்த சிப்பாய்களின் சடலங்கள் ஆகியவை தங்களால் கைப்பற்றப்பட்டதாகவும் விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

ரி 56 ரக துப்பாக்கிகள் - 4, 303 ரக ரைபிள்கள் - 2, மொத்த ரவைகள் - 460, ரவைக் கூடுகள் - 14, ஜே. ஆர். ரக கிரனேட்டுகள் - 2, ஹோல்ஸர் - 2 ஆகியனவே கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## இலங்கை அரசின் ஊடாகவே வடக்கு - கிழக்கிற்கு இந்திய உதவி

கொழும்பு, செப். 5

வடக்கு - கிழக்கு மக்களுக்கு மனிதாபிமான ரீதியில் இந்தியா வழங்கவிருக்கும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்க இலங்கை அரசு தயாராக இருக்கிறது.

கொழும்பில் உள்ள இந்திய தூதர் என்.எம் ஜா இதனை தெரிவித்தார்.

ஜனாதிபதி பிரேமதாஸாவை கடந்ததிங்கட்கிழமை சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் இத் தகவலை இந்தியத் தூதர் வெளியிட்டார்.

திரு. ஜா மேலும் கூறியதாவது:-

இலங்கை அரசுப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே தற்போது நடந்து வரும் சண்டையில், இந்தியா பிரதானமாக - மனிதாபிமான அம்சங்களில் மட்டுமே அக்கறை கொண்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் வவுனியா, மடு தேவாலயம், மன்னார் ஆகிய இடங்களில் மூன்று அகதி முகாம்களை அமைப்பது குறித்து இலங்கை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலி கொக்குவிலில் ஹெலி வேட்டு

கொக்குவில், திருநெல்வேலி பகுதிகளில் நேற்றும் ஹெலி வேட்டுகளைத் தீர்த்தது.

இப்பகுதிகளில் ஹெலி பல [illegible] பட்டன. (ஒ-69)

## ஊரடங்கு நீக்கம்?

பருத்தித்துறையில் கப்பலில் இருந்து இறக்கப்பட்ட உணவுப் பொருள்களை குடாநாட்டின் மற்றைய பகுதிகளுக்கு எடுத்துச் செல்ல வசதியாக குடாநாட்டில் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு நேற்றுத் தளர்த்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

ஊரடங்கு உத்தரவு நேற்று நீக்கப்பட்டதாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு வட்டாரங்களுக்கு கொழும்பில் இருந்து உத்தியோகப்பற்றற்ற ரீதியில் தெரிவிக்கப்பட்டதாகவும் —

அதனையடுத்து பருத்தித்துறையிலிருந்து பொருள்களை லொறிகள் மூலம் ஏனைய இடங்களுக்கு எடுத்துச் செல்ல செஞ்சிலுவைப் பிரதிநிதிகள் நேற்று முயற்சி எடுத்ததாகவும் அறிய வந்தது.

ஊரடங்கு உத்தரவு இன்று பகலிலும் நீக்கப்படும் என செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு வட்டாரங்கள் எதிர்பார்ப்பதாகவும் அறிய வந்தது. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தேவை

கல்தேக்கு (நாட்டுத்தேக்கு) விதை தேவை மில்க்வைற் யாழ்ப்பாணம். [C/5183]

## இடமாற்றம்

அரஸ் ஜவுளியகம் இல: 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம் மண்டேலா ரேடர் (புத்தக சாலை) இல, 2, பஸ்நிலையம் ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம் ஆகியன தற்போது இல, 256, பருத்தித்துறை வீதி, (நல்லூர் தேரடி முன்பாக) நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்குகின்றன என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். [13938]

சுன்னாகப் ஸ்ரேஷன் றோட்டிலிருந்த எமது முறிவு நோவு வைத்திய நிலையம் தற்போதைய சூழ்நிலை காரணமாக சிறுப்பிட்டி மத்திய பலநோக்குக்கூட்டுறவுச் சங்க வீதியில் இராமநாதன் வீட்டில் அமைந்துள்ளது. மு. ப 9 00மணி தொடக்கம் பி. ப. 6.00 மணிவரை வைத்தியம் நடைபெறும் என்பதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகிறேன். பி கிருபராசா முறிவு, நோவு வைத்தியர் வசாவிளான். [13941]

## Dilka Watch Works

தமிழ்நாட்டில் நல்ல விலைக்கு விற்பனை செய்யக்கூடிய சிற்றிசன், அல்பர், கசியோ கடிகாரங்கள் விற்பனைக்கு உண்டு. சகல கடிகாரங்களும் திருத்திக்கொடுக்கப்படும். டில்கா, வாச் வேக்ஸ், குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம். [14129]

## RATHY WACH WORKS

மேற்படி ஸ்தாபனம் 12, பொன்னையா லேன் (உப தபால் நிலைய அருகாமையில் பிடாரி கோவிலடி) ஆறுகால் மடம் ஆனைக்கோட்டை யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் இயங்குகிறது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம். இங்கு திருத்த வேலைகள் மணிக்கூடு பற்றறி, விற்பனைகள் நடைபெறுகின்றது என்பதையும் அறியத்தருகிறோம். [13937]

## பஜனை

தமிழ் மக்களுக்கு நிரந்தர அமைதியும், சுபீட்சமும் வேண்டி பல்வேறு அகதி முகாம்களுக்கும் சென்று திருமறைக் கலாமன்றத்தினர் பஜனை வழிபாடுகளை நடத்தி வருகின்றனர். (இ-6)

# அகதிகள் படகு மீது---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கி வந்த கடற்படையினர் அதிலிருந்த ஆண்களைத் தமது படகில் ஏறுமாறு கூறி அவர்களைத் தாக்கினர்.

படகின் மீதும் காயமடைந்தவர்கள் மீதும் பெற்றோலை தெளித்து எரிக்கப்போவதாகப் பயமுறுத்தினர்.

கடற்படைத் தாக்குதலினால் சேதமுற்ற படகு நீர் நிரம்பி கடலில் மூழ்கும் நிலை ஏற்பட்டது.

**காப்பாற்றக் கேட்டனர்**

இதனால் தங்களைக் காப்பாற்றும்படி உயிர் தப்பிய அகதிகள் கடற்படையினரிடம் கேட்டனர்.

இதன் பின்னர்—

கடற்படையினர் பருத்தித்துறை துறைமுகத்தில் உணவுப் பொருள்களுடன் தரித்து நின்ற 'சிகிரியா' கப்பலுக்கு தகவல் கொடுத்ததாகவும் —

அதனையடுத்து சிகிரியா கப்பல், தாக்குதலுக்குள்ளான படகு நின்ற இடத்தை நோக்கிப் போய், காயமுற்றவர்களையும் இறந்தோரின் சடலங்களையும் ஏற்றிக்கொண்டு பருத்தித்துறை துறைமுகத்திற்குக் கொண்டு போய்ச் சேர்த்ததாகவும்—

வழியில் வைத்து உயிரிழந்த எட்டுப்பேரின் சடலங்களும் கடலில் வீசப்பட்டதாகவும்—

இச்சம்பவத்தில் காயமுற்றவர் ஒருவர் உதயனுக்குத்தெரிவித்தார்.

'சிகிரியா' கப்பல் மூலம் பருத்தித்துறை துறைமுகத்துக்குக் கொண்டு வரப்பட்ட இந்த அகதிகள், அங்கு உணவுப் பொருள்களை இறக்கும் பணியில் ஈடுபட்டிருந்த செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு பிரதிநிதிகள் மூலம் ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

காயமடைந்த அகதிகளுக்கு சிகிரியா கப்பலைச் சேர்ந்த மாலுமிகள் சிகிச்சை அளித்தும், குழந்தைகளுக்கு பிஸ்கட் முதலியன கொடுத்தும் உதவி, ஆறுதல் கூறினர் எனவும் அவர் தெரிவித்தார்

காயமடைந்த 16 பேர்களில் சிலர் மந்திகை ஆஸ்பத்திரியிலும் நால்வர் மானிப்பாயிலுள்ள போதனா வைத்தியசாலைப் பிரிவிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குலேந்திரன் செல்வராணி [வயது 29]. பொன்னம்பலம் ரஞ்சினிதேவி [வயது 28], ரஞ்சனதாஸ் ரூபவதனா [வயது 27] நந்தகுமார்[வயது17]ஆகியோரே மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்,

இந்தச்சம்பவத்தில்வல்வெட்டித்துறைப் பகுதியை சேர்ந்த துரைச்செல்வம் மீரா, திருமதி சந்திரசேகரம், அவரது மகன் முரளி, சாம்பசிவம் தனலட்சுமி [வயது 56] ஆகியோரும் பருத்தித்துறையைச் சேர்ந்த மற்றும் நால்வருமே உயிரிழந்தனர் என அறியவந்தது. [ச-5-15]

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## சுப்பிரமணியம் தர்மபாலன்

(ஓய்வுபெற்ற விரிவுரையாளர், மொறட்டுவப் பல்கலைக்கழகம்)

தோற்றம்:
28 - 09 - 1936

மறைவு:
06 - 08 - 1990

எங்கள் அன்புத் தெய்வம் அப்பாவே! எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து எம்மை எல்லாம் நல்வழி காட்டிய தெய்வமே இன்று உங்களைப் பிரிந்து 31 நாள் ஆகியும் உங்கள் நினைவுகள் எங்களை விட்டு அகலவில்லையே.

அப்பாவின் இறுதிக் கிரியைகளில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும். வேறு வழிகளில் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

உங்களை மறவாத:
**அன்பு மனைவி, மக்கள், உற்றார், உறவினர்.**

4, செட்டித் தெரு,
நல்லூர். [14136]

# உடனடி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கையாகவே 200 மெற்றிக்தொன் உணவுப் பொருள்கள் கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் உணவுப் பொருள்கள் மேலதிக முன்கையிருப்பில் களஞ்சியப்படுத்தப்படும் என்று சங்கப் பிரமுகர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். [அ-5-3]

# ஓராண்டு நினைவஞ்சலி

## வித்தியானந்தன் கிசோக்குமார்

[கிசோ]

[புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி 6ஆம் ஆண்டு மாணவன்]

மலர்வு: 15 - 12 - 1978
உதிர்வு: 16 - 09 - 1989

ஓராண்டு ஓடோடி மறைந்து விட்டது கிசோ
தேடி அலைகின்றோம் நித்தம் உன் ஆவியை
பாடித் திரிந்த பள்ளிப் பருவத்தை
உள்ளம் கவர்ந்த நினை வலைகள்
மறக்க முடியாது நித்தம் நினைந்து வாடுகின்றோம்
ஆசையாய் வளர்த்திட்ட நம கிசோக்குமாரே
உம்மை இழந்த வேதனையில் தேறும்
வகை தெரியாது துடிக்கின்றோம்.

உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

புத்தூர் மேற்கு. [14132]

# ரேடியோ தேவை

ஒலிப்பதிவு வசதி கொண்ட ரேடியோ (Two - in - One Radio) தேவை. சொனி, சன்யோ, நாஷனல் ரகங்களில் ஒன்றாக இருக்க வேண்டும்.

நாஷனல் ''வேர்ல்ட் பான்ட் செட்'' இருந்தால் விரும்பி வாங்கப்படும்.

தொடர்பு கொள்ளவும்:

**உதயன் பணிமனை,**
[illegible]
யாழ்ப்பாணம்.

சாவகச்சேரி கல்வயல்

## சிவஸ்ரீ பஞ்சாட்சரக்குருக்கள்

(தியாகராஜக்குருக்கள்)

அவர்களின்

# தசாக கிரகயக்ஞ அழைப்பு

29 - 08 - 90 புதன் அன்று சிவபதமடைந்த எமது தந்தையின் தகனக்கிரியைகள் 30 - 08 - 90 அன்று நடைபெற்றது. அவரின் ஆத்மசாந்திக்காக பின்வரும் திகதிகளில் நடைபெறும் கிரியைகளில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**07-09-90 வெள்ளிக்கிழமை [10-ம்நாள்] தசாகம்**
**13-09-90 திங்கள் [13-ம் நாள்] கிரகயக்ஞம்**

இங்ஙனம்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.** (14130)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

திரு.

## பொன்னம்பலம் கணபதிப்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியர் அ.மி.த க பாடசாலை)

தோற்றம்: 24 - 06 - 1929
மறைவு: 06 - 08 - 1990

எங்கள் அன்புத் தெய்வமே!

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து எம்மையெல்லாம் நல்வழிகாட்டிய தெய்வமே! இன்று உங்களைப் பிரிந்து 31 நாள் ஆகியும் உங்கள் நினைவுகள் எங்களை விட்டு அகலவில்லையே.

அத்துடன் எமது தந்தையின் இறுதிக்கிரியைக்ளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், ஏனைய உதவிகள் செய்தவர்களுக்கும் இதயபூர்வமான நன்றியைத்தெரிவித்துக் கொள்கிறோம்.

**மனைவி, பிள்ளைகள்.**

இணுவில் மேற்கு,
இணுவில். [14138]

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## சின்னத்தம்பி ஜெயந்திரன்

[கைதடி மேற்கு]

தாயின் மடியில்: 10 - 06 - 1963
ஆண்டவன் அடியில்: 10 - 09 - 1984

அன்பும் பண்பும் கொண்ட எங்கள் செல்வமே!

எங்களை விட்டுப்பிரிந்து வவுனியா அசம்பாவிதத்தில் கொடியவர்களுக்கு இரையாகி விட்டாய்! ஆறு ஆண்டுகள் சென்றாலும் செல்வமே உன் நினைவு என்றுமே அகலவில்லை.

உன் பிரிவால் வாடும்;
அம்மா, அக்கா, அத்தான், தம்பிமார்,
தங்கை, அப்பையா, மாமாமார்,
அன்ரிமார், அத்தை,
உற்றார், உறவினர்.

கந்தரோடை வீதி,
மாசியப்பிட்டி சந்தி,
சண்டிலிப்பாய். [14135]

# மரண அறிவித்தல்

## கனகரத்தினம் சண்முகலிங்கம்

[ரகு]

(முன்னாள் You One Co - சவூதி அரேபியா உத்தியோகஸ்தர்)

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மானிப்பாயில் வசித்தவருமான கனகரத்தினம் சண்முகலிங்கம் (ரகு) 01 - 09 - 90 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மு கனகரத்தினம் (வைரக்கனகர்) மரகதம் தம்பதியினரின் மகனும், றஞ்சிதமலரின் அன்புக் கணவரும், லக்ஷாயினியின் அன்புத் தந்தையும், பாலகிருஷ்ணன், தெட்சணாமூர்த்தி, சந்திர சேனன், சற்குணலிங்கம், தங்கேஸ்வரி, புவனேஸ்வரி, சரோஜினி, செல்வராணி ஆகியோரின் சகோதரரும், அட்சலிங்கம், ஜெகநாதன், பேரானந்தன், பாலச்சந்திரன், சீதாதேவி, தெ. இராஜேஸ்வரி, திலகவதி, ச. இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 02 - 09 - 90 அன்று நல்லூரில் நடைபெற்று இறுதித் தகனம் பி. ப. 2 மணியளவில் செம்மணி மயானத்தில் நடைபெற்றது.

இத்தகவலை உறவினரும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**க. பாலகிருஸ்ணன்.**

17, நாயன்மார் வீதி,
நல்லூர். [14137]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி வழமைக்கு திரும்புகிறது
# அலுவலகங்கள் இயங்கவில்லை

கிளிநொச்சி, செப். 5
கிளிநொச்சி பிரதேசம் துரிதமாக வழமைக்குத் திரும்பிக் கொண்டு இருக்கின்றது.

நகரில் உள்ள சில வர்த்தக நிலையங்கள் தமது வியாபாரத்தை ஆரம்பித்து உள்ளன.

இதே வேளை அரச அலுவலகங்கள், வங்கிகள், தபால் கந்தோர் ஆகியன இன்னும் இயங்க ஆரம்பிக்கவில்லை.

இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமம் அடைந்து வருகின்றனர்.

தற்போது இங்கு நிலவும் சுமூகமான நிலையைக் கருத்தில் கொண்டு அதிகாரிகளும், ஊழியர்களும் கிளிநொச்சி திரும்பி மக்களுக்கு சேவை ஆற்ற வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். [இ-76]

## பண்டத்தரிப்பு வை. எம். சீ. ஏ. நிவாரண உதவி

பண்டத்தரிப்பு, செப். 5
பண்டத்தரிப்பு வை. எம். சீ. ஏ. இடம்பெயர்ந்து வந்தவர்களுக்கு உணவுப்பொருள்களை மூன்றாம் கட்டமாக வழங்கி வருகிறது.

தென்இந்திய திருச்சபை யாழ் ஆதீன அத்தியட்சகர் வணக்கத்திற்குரிய டி. ஜே. அம்பலவாணர் அவர்களின் ஏற்பாட்டில் கொழும்பிலிருந்து இப்பொருள்கள் இங்கு கொண்டுவரப்பட்டிருந்தன. (இ-120)

## விழிப்புக்குழு கருத்தரங்கு

கொடிகாமம், செப். 5
ஸ்ரீலங்கா அரசு மக்களையும் விடுதலைப் புலிகளையும் பூண்டோடும் அழிக்க சகல வழிகளிலும் தன்னாலான முயற்சிகளை எடுத்து வருகிறது. இவ்வேளையில் மக்கள் அனைவரும் தங்கள் மனப்பூர்வமான பங்களிப்பை விடுதலைப்புலிகளுக்கு உணர்வுபூர்வமாக வழங்கவேண்டும்.

தென்மராட்சி கிழக்கு விழிப்புக்குழு, கருத்தரங்கில் கொடிகாமம், வட்டக்கச்சி செயலாளர் திரு இராகுலன் இவ்வாறு கூறினார்.

திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் திரு. பொ. கந்தையனார் தலைமையில்கருத்தரங்கு நடைபெற்றது. (இ-75)

## திருமலை அகதிகளில் பலர் தமிழகம் சென்றுவிட்டனர்

யாழ்ப்பாணம், செப். 5
முல்லைத்தீவு மாவட்டத்தில் அகதிகளாக தஞ்சமடைந்திருந்த 40 ஆயிரம் திருமலை அகதிகளில்30 ஆயிரம் பேர் வரை தமிழகத்துக்கு சென்றுள்ளனர்.

திருகோணமலையில் இருந்து அகதிகளாக வந்த 40 ஆயிரம் மக்களுக்கு முகாம்கள் திறக்கப்பட்டன.

அவர்களில் இந்தியாவுக்கு சென்றவர்கள் போக சுமார் 10 ஆயிரம் பேரே முல்லைத்தீவில் தற்போது உள்ளனர்.

விசுவமடு, உடையார்கட்டு, சுதந்திரபுரம், புதுக்குடியிருப்பு, இரணைப்பாலம், ஆனந்தபுரம், முத்தையன்கட்டு, குமுளமுனை, அளம்பில், செம்மலை, முள்ளியவளை, தண்ணீரூற்று ஆகிய பகுதிகளில் உள்ள முகாம்களிலேயே இவர்கள் தங்கியுள்ளனர்.

வசதி இல்லாததால் இவர்கள் தமிழகம் செல்லவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

நிலைமை சீரானதும் திருகோணமலை திரும்பவே இவர்கள் விரும்புகின்றனராம். (இ-3-6)

## சேதம்

கொடிகாமம், செப். 5
கொடிகாமத்திலுள்ள தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்க கட்டடத்தின் சில பகுதிகள் பொம்மரால் சேதமாக்கப்பட்டுள்ளன. (இ-75)

## பெஸ்டலின் பணிப்பு

கடந்த திங்கள் முதல் மட்டக்களப்பு மாவட்டத்தில் மீண்டும் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த சகல நடவடிக்கைகளையும் எடுக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபை அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா பணித்திருக்கிறார். [ஒ-எ]

## பனங்கட்டி தயாரிப்பு

பண்டத்தரிப்பு தெங்கு பனம்பொருள்கள் உற்பத்தி விற்பனைச் சங்கம் கள் உற்பத்தியைக் குறைத்துள்ளது பதநீர் சேர்த்து பனங்கட்டி தயாரிக்கத் தொடங்கியுள்ளது. (இ-120)

## செய்திச் சாரம்

### பெற்றோல் கட்டுப்பாடு

கொழும்பு, செப். 5
பெற்றோல் பாவனையைக் கட்டுப்படுத்துவது குறித்து அரசு தீவிரமாக பரிசீலனை செய்து வருகிறது. வளைகுடா நெருக்கடி காரணமாக உலக சந்தையில் எண்ணெய்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. [இ-எ]

### டயர், சிரட்டை

யாழ்ப்பாணம், செப் 5
மானிப்பாயில் உள்ள யாழ். போதனா வைத்தியசாலைப் பிரிவுக்குத் தேவையான ஒரு தொகை பழைய ரயர், ரியூப் மற்றும் சிரட்டை என்பனவற்றை நல்லூர் பல. நோ. கூ. சங்க ஆறுகால்மடம் கிளையின் மகளிர் சங்கம் சேகரித்துக்கொடுத்துள்ளது. [இ-5]

### பனாட்டு உற்பத்தி

சாவகச்சேரி, செப். 5
மட்டுவில் மகாவித்தியாலயத்தில் உள்ள திருமலை அகதிகள் பனாட்டு உற்பத்தியில் ஆர்வமுடன் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களை ஊக்கப்படுத்த பனம் பழங்களைச் சேகரித்து இலவசமாக வழங்க இப்பகுதி இந்து இளைஞர் மன்றம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது. (இ-31)

### அலங்கார உற்சவம்

கொழும்புத்துறை கிழக்கு மணலியம்பதி அம்மன் ஐயனார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று 5 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். (இ-30)

### "சாம்பு" வுக்கு பதில் பனம் கழி

சாவகச்சேரி, செப். 5
சாவகச்சேரிப் பகுதியில் சிலர் "சாம்பு"வுக்குப் பதிலாக பனம் கழியைப் பயன்படுத்துகின்றனர்.

பனாட்டுக்கும் பெரும் கிராக்கி இருந்து வருகிறது. நல்ல தரமான பனாட்டு சோடி 7 ரூபாவுக்கு விற்பனை ஆகிறது.

அதே சமயம் இப்பகுதியில் உள்ள அகதி முகாம்களில் சிலர் சவர்க்காரம் தட்டுப்பாட்டினால் உடுப்புத் தோய்ப்பதற்கு பனம்கழியைப் பயன்படுத்துகிறார்கள் என்றும் கூறப்படுகிறது. (இ-31)

### இடம் பெயர்ந்தவர் வீட்டில் திருட்டு

வல்வெட்டித்துறை, செப். 5
கடற்படையினரின் ஷெல் தாக்குதல் காரணமாக இடம் பெயர்ந்தவரின் வீட்டில் இருந்த விலை உயர்ந்த வெளிநாட்டுப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

கம்பர் மலையில் சரிவத்தனை என்ற இடத்தில் எஸ். சத்தியமூர்த்தி என்பவரின் வீட்டிலேயே இத் திருட்டு இடம் பெற்றது. [இ-160]

### அகதிகள் இடம் மாற்றம்

சாவகச்சேரி, செப். 5
கைதடி இரட்சண்ய சேனை விடுதியில் உள்ள வெளி மாவட்ட அகதிகளை மட்டுவில் மகாவித்தியாலய அகதிகள் முகாமுக்கு இடம்மாற்றுவதென தென்மராட்சி அகதிகள் நிவாரணக்கழகம் முடிவு செய்துள்ளது. மட்டுவில் மகாவித்தியாலயத்தில் இருந்த சுமார் நூறு குடும்பங்களில் 50 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இந்தியாவிற்குச் சென்றுவிட்டனர்.

## 3 மாதமாக சம்பளம் இல்லை

கொழும்புத்துறை. செப். 5
கொழும்பில் தலைமைக் காரியாலயத்தைக் கொண்டு செயல்பட்டு வரும் யாழ். மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் சில அலுவலகங்களின் ஊழியர்களுக்குக் கடந்த மூன்று மாதங்களாக ஊதியம் வழங்கப்படவில்லை.

ஆனால் சில அலுவலகங்களில் பணி புரியும் ஊழியர்களுக்கு ஜூன், ஜூலை மாதங்களில் ஆயிரம் ரூபா முற்பணமாக வழங்கப்பட்டுள்ளது. [இ - 30]

## மட்டக்களப்பு பாடசாலைகள்: மீண்டும் திறக்க நடவடிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்தில் 135 அரச பாடசாலைகளை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் அறுபதுக்கும் அதிகமான பாடசாலைகளில் அகதிமுகாம்கள் இயங்குவதாக புனர்வாழ்வு அமைச்சின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. (இ-எ)

## இந்தியா செல்ல தீவுப்பகுதி சென்றவரும் சூட்டுக்குப்பலி

அச்சுவேலி, செப். 5
அச்சுவேலியில் இருந்து அகதியாக இந்தியாவுக்குச் செல்வதற்காக தீவுப்பகுதியில் தங்கி இருந்த ஒருவரும் சமீபத்திய இராணுவ நடவடிக்கையின்போது சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். அச்சுவேலியைச் சேர்ந்த திருச்செல்வம் நோவிற்ராசா (போல்) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவர் ஆவார்.

ஊர்காவற்றுறையில் இருந்து மண்டைதீவுக்கு முன்னேறிய படையினர் அல்லைப்பிட்டியில் வைத்து இவரைச் சுட்டுக் கொன்றனர் என்று இவருடன் கூடச் சென்ற உறவினர்கள் தெரிவித்தனர். (இ-11)

## இலங்கைக்கு டீசல் கடத்தும் முயற்சி முறியடிக்கப்பட்டது

சென்னை, செப் 5
இராமேஸ்வரத்தில் இருந்து இலங்கைக்கு டீசல் கடத்திச் செல்ல எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டதாக சென்னையில் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக வான் சாரதி ஒருவரும் அவரது உதவியாளரும் கைது செய்யப்பட்டனர்.

ரயில் மூலம் இராமேஸ்வரம் கொண்டு வரப்பட்ட 600 லீற்றர் டீசலும் [illegible] பற்றப்பட்டது. கடத்தி[illegible] தவர் தப்பி விட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## மாகாணசபையை இடைத்தீர்வாக ஏற்பதற்கும் காலம் கடந்துவிட்டது

### ராய்ட்டருக்கு யோகி பேட்டி

யாழ்ப்பாணம், செப். 5
மாகாண சபையை இடைக்காலத் தீர்வாக ஏற்கக்கூடிய காலம் இப்போது கடந்து விட்டது.

ஆகையால்—

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தும் —

இலங்கையின்ஒற்றையாட்சி முறையை அகற்றியும் —

மாநில சுயாட்சிக்கான தீர்வை முன்வைத்தால் அதனை நாம் பரிசீலனை செய்வோம்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் யோகி ராய்ட்டர் செய்தியாளர்களுக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

அந்தப் பேட்டியின் முக்கிய பகுதி வருமாறு:-

இன்று வடக்கு—கிழக்கில், தமிழ்ப் பிரதேசங்களில், சிங்கள அரசு பொருளாதார ரீதியான தடைகளை விதித்துள்ளது. இதன் மூலம் மறைமுகமாக சிங்களப் பகுதிகளிலும் இந்தத் தடை விதிக்கப்படுகின்றது என்பதே அப்பட்டமான உண்மையாகும்.

இந்தப் பொருளாதாரத் தடையின் மூலம் சிங்கள தேசமும் பெரிய அளவிலான பொருளாதாரச் சீரழிவையும் தாக்கங்களையும் எதிர் கொள்ளவேண்டிவரும்.

ஸ்ரீலங்கா அரசாங்கம் பாதுகாப்பு - இராணுவம் - செலவாக ஒருநாளைக்கு 6 கோடி ரூபாவைச் செலவு செய்கிறது.

இந்த நாட்டின் இனப் பிரச்சினைக்கு மாகாணசபை என்பது ஒரு நிரந்தரத் தீர்வல்ல. இதனை ஓர் இடைக்காலத் தீர்வாகப் பார்த்து, தேர்தலில் போட்டியிட நாம் அப்போது தயாராக இருந்தோம்.

ஆனால் இப்போது, மாகாணசபையை இடைக்காலத் தீர்வாக ஏற்பதற்கான காலம் கடந்துவிட்டது,

இலங்கை அரசு, முந்திய தலைமுறையினரை ஏமாற்றியது போல, எம்மையும் பேச்சுவார்த்தைகள் என்ற போர்வையில் ஏமாற்ற முயற்சித்தது ஆனால் நாம் ஏமாறவில்லை. இதுவே அவர்களுக்குப் பெரிய ஏமாற்றமாக உள்ளது. [அ]

## போராடி வெல்ல முடியாத நிலையில் மக்களைப் பட்டினி போட முயற்சி

### அன்னையர் முன்னணிப் பிரமுகர் உரை

போராடி வெல்லமுடியாத அரசு தமிழ் மக்களைப் பட்டினி போட்டு வெல்லப்பார்க்கிறது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அன்னையர் முன்னணிப் பிரமுகர் திருமதி சபாநாயகம்.

தமிழ் மக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்கள் நடத்தப்படுவதையும், [illegible] விதித்திருப்பதையும் கண்டித்து- அவற்றை உடனடியாக நிறுத்தக்கோரும் மகஜரை மேலதிக அரச அதிபரிடம் கையளிக்கும் வைபவத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திங்கள் காலை யாழ். முத்திரைச்சந்தியில் இருந்து அன்னையர் முன்னணியினர் நடத்திய ஊர்வலத்தின் இறுதியில் இந்த மகஜர் செயலகத்தில் வைத்துக் கையளிக்கப்பட்டது.

அன்னையர் முன்னணித் தலைவி திருமதி சரஸ்வதி கனகரத்தினம் பேசுகையில் கூறியதாவது:-

கடந்த 3 மாதகாலமாக ஸ்ரீலங்கா அரசு திட்டமிட்டு தமிழ்மக்கள் மீது பொருளாதாரத்தடையை ஏற்படுத்தி மக்களைத் தவிக்கவிட்டுள்ளது.

எமது அடிப்படை உரிமைகளை அரசு மறுக்கும்போது அதனை நாம் தட்டிக் கேட்காது இருக்க முடியாது.

எனவே, இது விடயத்தில் எமது மகஜரை உடனடியாக அரசிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார். (இ - 5 - 6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரந்தன் மிதி வெடியில் மற்றும் ஒருவர் மரணம்

## இதுவரை 2பேர் பலி; 6பேர் காயம்

பரந்தன், செப். 5

பரந்தனில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இடம் பெற்ற மற்றொரு மிதிவெடிச் சம்பவத்தில் ஒருவர் மரணமானார். மற்றும் ஒருவர் வலதுகாலை இழந்தார்.

பரந்தனில் இருந்து இராணுவம்வெளியேறியபின்னர் இது வரை மிதிவெடிக்கு இருவர் பலியாகி உள்ளனர். அறுவர் காயமடைந்தனர்.

குமரபுரத்தைச் சேர்ந்த நாதன் கற்பகநாதன் (வயது 26) என்பவரே திங்கட்கிழமை இடம்பெற்ற சம்பவத்தில் பலியானவர் ஆவார்.

குமரபுரத்திலுள்ள தமது வீட்டுக்குச் செல்லும்போது வீதியின் அருகே புதைக்கப் பட்டிருந்த மிதிவெடியில் இவர் சிக்கினார்.

காயமடைந்தவர் கடை உரிமையாளரான சின்னத்தம்பி சண்முகம் (வயது 55) தமது கடையைத் துப்புரவு செய்துகொண்டிருந்தபோது மிதிவெடியில் இவர் சிக்கினார். (இ-15)

### முல்லைத்தீவுக்கென கப்பலில் வந்த

# உணவுப் பொருள்களை இறக்க அரசாங்க அதிபர் முயற்சி

யாழ்ப்பாணம், செப். 5

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அனுப்பப்பட்ட உணவுப் பொருள்களை அங்கு இறக்க வசதியாக ஊரடங்கு உத்தரவைத் தளர்த்துமாறு, அரச அதிபர் திரு. கே. பொன்னம்பலம், அத்தியாவசிய சேவைகள் நாயகத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் இருந்து உணவுப் பொருள்களுடன் வந்த இரண்டு கப்பல்களும், அங்கு நடைபெற்று வரும் இராணுவ நடவடிக்கை காரணமாக பொருள்களை இறக்காமல் பருத்தித் துறைக்கு வந்து சேர்ந்துள்ளன.

இங்கு பொருள்களை இறக்கிய பின்பு கொழும்புக்குத் திரும்பும் வழியில் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அனுப்பப்பட்ட பொருள்களை இறக்க அரச அதிபர் முயற்சி மேற்கொண்டுள்ளார்.

''ரிங்கோமலி றேடேர்ஸ்'' என்னும் கப்பலில் அரிசி, சீனி, பால்மா, பருப்பு ஆகிய பொருள்களும், மாவட்டத்துக்கான தபால்களும் —

''சிகிரியா'' என்னும் கப்பலில் 100 தொன் மாவும் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-3-6)

# மரண அறிவித்தல்கள்

## தியாகராசா சிறீதரன்

வண்ணார்பண்ணை கோபால் ஒழுங்கையைச் சேர்ந்த திரு. தி. சிறீதரன் அகாலமரணமானார்.

இவர் தியாகராசா (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்), நகுலேஸ்வரி ஆகியோரின் மகனும்; முரளீதரன் (லண்டன்), கிரிதரன், ஜெயதரன் (கனடா) ஜெனனி, பவானி, தாரிணி ஆகியோரின் சகோதரரும், தென்னீசன், பாலகுகன், விஜயரட்ணம், அகிலா, ரஞ்சினி ஆகியோரின் மைத்துனரும்; ஜனகன், வதசலா, காலிங்கன், சுமித்திரா, பாலமுகுந்தன், ஹேமலதா, நிமலேஸ்வரன், விஜயராஜ், மகேந்திரராஜ். ஜெயராஜா ஆகியோரின் மாமனாரும், துளசியின் சித்தப்பாவும் ஆவார்.

ஈமக்கிரியைகள் 05-09-90 புதன்கிழமை இன்று காலை 10 மணிக்கு அன்னாரது பெரிய தந்தையார் மு. நடராசா அவர்களின் அன்பகம், அளவெட்டி வடக்கு இல்லத்தில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு. தியாகராசா

கோபால் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

[14139]

## யோ. மரியாம்பிள்ளை

வசாவிளானைச் சேர்ந்த யோ. மரியாம்பிள்ளை காலமானார்.

இவர் ஞானம்மாவின் அன்புக்கணவரும், திரேசம்மா, அருளம்மா, அப்பலோனிக்கா சாமியாப்பிள்ளை, றோசம்மா, அன்னம்மா, மேரிபுஸ்பம், மிக்கேல் அமிர்தநாயகம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும்; ஞானமுத்து, தேவசகாயம் சின்னத்துரை [லேக்கவுஸ்], தம்பிஐயா துரைராசா (சுவிஸ்), யசிந்தா, பிறேமா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு கோப்பாய் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு வசாவிளான் மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
பிள்ளைகள்

சென்ஜேம்ஸ் வீதி,
வசாவிளான்.

(13942)

# போதிய நிவாரணமின்றி வாடும் பூம்புகார், நாவலடி அகதிகள்

## தொண்டர் நிறுவனங்கள் எட்டியும் பார்த்ததில்லையாம்

யாழ்ப்பாணம், செப். 5

யாழ்ப்பாணக் குடாநாட்டின் எல்லாப் பகுதிகளிலும் நாளாந்தம் விமானத் தாக்குதல்கள் நடக்கின்றன. ''பிளாட்'' உள்ள வீடுகளில் இருப்பதற்கே மக்கள் பயப்படுகிறார்கள்.

ஆனால் அரியாலை கிழக்கு, பூம்புகார், நாவலடியில் உள்ள 550 குடும்பங்களைச் சேர்ந்த அகதிகள் பனந்தோப்புகளிலும் மரங்களிலும், கயிறோடவிட்டு ஓலைகளைப் பரவி அவற்றின் கீழ் காலத்தைப் போக்குகிறார்கள்! பட்டினி நிலையில் அவர்கள் பரிதவிக்கிறார்கள்!!

அவர்களைக் கண்டதும் யாழ். நகரில் இருந்து சுமார் பத்து மைல் தொலைவில் உள்ள இந்தப் பகுதியில் இப்படியும் மக்கள் கஷ்டப்படுகிறார்களே என்று எண்ணத் தோன்றியது.

குருநகர், பாஷையூர், துண்டி, மண்டைதீவு, வேலணை, ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவர்களே இந்த அகதிகள்.

கடற்கரைப் பிரதேசமான இப் பகுதிகளில் போக்குவரத்துச் செய்வதே சிரமம். அங்கு போய் தஞ்சம் அடைந்திருக்கும் அகதிகளுக்கு தண்ணீர், சுகாதார வசதி எதுவும் இல்லை. சிலர் ஒரு நேரச் சாப்பாடு கூட இல்லாத நிலையில் பரிதவிக்கிறார்கள். பனம் பழமும், மீனும் தான் ஓரளவேனும் கிடைக்கின்றன,

அகதிகளில் அனேகரில் பட்டினி முகம் தெரிகிறது.

அரசு வழங்கிய ஒருவார நிவாரணத்லைதத் தவிர வேறு எந்த நிவாரணமும் அரசாலோ, அரசுசார்பற்ற நிறுவனங்களாலோ வழங்கப்படவில்லை என்று அகதி ஒருவர் கவலைதோய்ந்த முகத்துடன் உதயன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்,

ஒருநாளைக்கு ஒருநேரச் சாப்பாடுகூடப் பெறமுடியாத அவல நிலையில் உள்ளதாக மற்றொரு அகதி தெரிவித்தார்.

'வைத்திய சுகாதார வசதி அளிப்பதற்குக்கூட எந்தத் தொண்டர் நிறுவனமும் எங்களை ஏறெடுத்தும் பார்க்கவில்லை' என்று இன்னொருவர் அழாக்குறையாகச்சொன்னார்.

ஒரேயொரு தொண்டர்நிறுவனம் மட்டும் இப்பகுதிக்குச் சென்று, அகதிகளின் விவரங்களைப் பதிவு செய்ததாகவும் அதுவும் பின்னர் வரவில்லை என்றும் பலரும் தெரிவித்தார்கள். (அ-3-6)

# கப்பலில் வந்த மண்எண்ணெய் பொதுமக்களுக்கு கிடையாது

கப்பல்ல் கொண்டு வரப்பட்ட மண்எண்ணெய் பொதுமக்களுக்கு வழங்கப்படமாட்டாது.

யாழ் - அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் விடுத்துள்ள சுற்று நிருபத்தில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது

''லங்காசிறி'' கப்பல் மூலமாக 45 பரல் மண்எண்ணெய் கொண்டுவரப்பட்டு பருத்தித் துறையில் இறக்கப்பட்டுள்ளது.

இந்த பரல்களில் 10 பரல்கள் அரச வைத்தியசாலைகளுக்கும் —

23 பரல்கள் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கும்—

4 பரல்கள் விசேடமாக தீவுப்பகுதி ப. நோ. கூ. சங்கங்களுக்கும் —

8 பரல்கள் அரச அதிபரின் அவசர தேவைகளுக்காவும் — ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன

ப. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்கப்படும் மண்எண்ணெயை அனுமதி கிடைக்கும வரை அவை இருப்பில் வைக்கவேண்டும் என்று அரச அதிபர் அறிவித்துள்ளார். [இ-3]

# தீவுப்பகுதி ஆஸ்பத்திரிகளுக்கு இன்றுமருந்துகள் அனுப்பப்படும்

தீவுப்பகுதி ஆஸ்பத்திரிகளுக்கு இன்று மருந்து வகைகள் அனுப்பப்பட இருக்கின்றன.

சுகாதாரப் பகுதியினால் வழங்கப்படும் மருந்து வகைகளையும், மண்ணெண்ணையையும் யாழ். செஞ்சிலுவைச் சங்கம் எடுத்துச் சென்று அங்கு வைத்தியசாலைகளுக்கு வழங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை—

மூடப்பட்டுள்ள வேலணை, ஊர்காவற்றுறை வைத்தியசாலைகளை மீண்டும் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. (ஒ-3-5)

### இலங்கை....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

அரசுடனான பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மேற்பார்வையில் இம் முகாம்கள்இயங்கும்.

இம் முகாம்கள் செயற்பட ஆரம்பித்ததும், தமிழ்நாடு வரும் இலங்கைத்தமிழ் அகதிகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறையக்கூடும்.

இப்படி இந்தியத் தூதர் திரு. ஜா சொன்னார். (ஒ-எ)

## வீரமரணம்

யாழ்ப்பாணம், செப். 5

யாழ். கோட்டையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மோதல் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பாபு [ஐயப்பெருமாள் ஜெயக்குமார்] ஊறணி, காங்கேசன்துறை- வீரமரணமடைந்தார். [உ]

## முஸ்லிம் குழு பிரேமாவுடன் பேச்சு!

கொழும்பு, செப். 5

முஸ்லிம் ஸ்தாபனங்களின் தூதுக்குழு ஒன்று சபாநாயகர் எம், எச். முஹமது தலைமையில் கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி பிரேமதாஸாவை சந்தித்து வடக்கு-கிழக்கு நிலைமை குறித்து பேச்சுகள் நடத்தியது.

ஜனாதிபதி செயலகத்தில் இச் சந்திப்பு இடம் பெற்றது.

தூதுக் குழுவில் முஸ்லிம்களின் 31 ஸ்தாபனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் இடம் பெற்றிருந்தனர். (உ-எ)

## திருத்த வேலை முடிந்ததாம்

யாழ்ப்பாணத்தில் பண்ணைத் தாம்போதியைத்திருத்தும் வேலைகள் முடிவடையும் கட்டத்தில் இருப்பதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஊர்காவற்றுறை அகதிகளுக்கு போரூட் உதவி

யாழ்ப்பாணம், செப்.5

ஊர்காவற்றுறைப்பகுதியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர உதவியாக உலர் உணவுப் பார்சல்களை போரூட் அமைப்பு இன்று அங்கு அனுப்ப ஏற்பாடாகி உள்ளது.

உடனடி நிவாரணமாக வழங்குவதற்கென ஆயிரத்து [illegible] டியாக விநியோகிக்கவுள்ளனர். (ஒ-3-5)

# மரண அறிவித்தல்

## அமரர் ஈ. கே. குமரையா

(இளைப்பாறிய யாழ். செயலக கட்டட மேற்பார்வையாளர், தலைவர்- அரியாலை சனசமூக நிலையம்; தலைவர்- அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம்; செயலாளர், யாழ். உதைபந்தாட்ட லீக்; தலைவர், யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தகர் சங்கம்)

ஈ. கே. குமரையா காலமாகிவிட்டார். இவர் டெய்சி மேரி அக்னெஸின் அன்புக் கணவரும், காலம் சென்ற தேவராஜன் (விற்பனை திணைக்கள முகாமையாளர், யாழ்ப்பாணம்), ரவீந்திரகுமார் (சுங்க இலாகா யாழ்ப்பாணம்), சாந்தினி, ஜெயந்தினி, கிறிஸ்ரி ராஜ்குமார் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மங்களா தேவராஜன் (ஆசிரிய கலாசாலை, பலாலி), பற்றீசியா ரவீந்திரகுமார் (ஆசிரியை சரஸ்வதி வித்தியாலயம், மட்டுவில்), ராஜரெட்ணம், அலோசியஸ் (நீர்ப்பாசன இலாகா மன்னார்) ஆகியோரின் மாமனாரும், டீன், சசி, யாழினி, சிந்துயா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05 - 09 - 90) புதன்கிழமை காலை 8 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து அர்ச். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

99/6, சந்தனமாதா ஒழுங்கை,
பாண்டியந்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

[14134]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 05-09-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org